# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் தமிழ்நாடு முன்னுதாரணமாக இருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியோடு, காவிரி கழிமுக பகுதியில், பருவநிலை மாறுதல் தழுவல் திட்டம், கடற்கரை மாவட்டங்களை புயல்களிலிருந்து பாதுகாத்தல், காலநிலை மாறுபாடுகளினால் ஏற்படும் வெள்ள அபாயங்களை தணித்தல், பாசன வசதியை மேம்படுத்துதல், கடல்நீர் உட்புகுவதை தடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஆறுகள் – நீரேற்று நிலங்களை மேம்படுத்த ரூ.825 கோடியில் திட்டம்!**

இந்தத் திட்டத்தின் முதல் பகுதியாக, அடப்பாறு, ஹரிச்சந்திரா நதி, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு, வேதாராண்ய கால்வாய் ஆகிய 6 ஆறுகள் மற்றும் 13 நீரேற்று நிலையங்களின் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வெண்ணாறு, பாமினியாறு, கோரையாறு, மனங்கொண்டனாறு, மரக்கா கோரையாறு, கடுவையாறு ஆகிய 6 ஆறுகள் மற்றும் 6 நீரேற்று நிலையங்களை மேம்படுத்துவதற்காக, முதல்நிலை திட்ட அறிக்கை ஆயிரத்து 825 கோடி ரூபாய் மதிப்பில் தயார் செய்யப்பட்டு, இந்திய அரசின் பொருளாதார விவகாரத் துறைக்கு, கடனுதவி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டு, ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது.

இவை அனைத்துமே, இயற்கையைப் பாதுகாப்பதில் நம் மாநிலம் முன்னணியில் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாடு ஈரநில இயக்கத்தின் முயற்சிகளால், தமிழ்நாட்டில் இருந்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து 18ஆக அதிகரித்திருக்கிறது. இதன்மூலம் முக்கியத்துவம் வாய்ந்த சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் நம்முடைய அரசுக்கு உறுதிப்பாட்டை நீங்கள் அறியலாம்.

தமிழ்நாட்டின் காலநிலை முன்னெடுப்புகளின் வெற்றிக்குக் காரணமாக இருப்பது, பொதுமக்கள் பங்கேற்புதான் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இளைஞர்களிடையே அதிகரிப்பு!**

“மீண்டும் மஞ்சப்பை” போன்ற பரப்புரைகள் துணிப்பைகளின் பயன்பாட்டை அதிகரித்திருக்கிறது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டை கணிசமாக குறைத்திருக்கிறது. முன்பு இருந்ததைவிட, இப்போது சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே, குறிப்பாக, இளைஞர்களிடையே அதிகமாகி இருக்கிறது.

இந்த விழிப்புணர்வை பயன்படுத்தி திட்டங்களைத் தீட்டி வருகிறோம். வெப்ப உயர்வு தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்ற எச்சரிக்கையை ஐ.நா. காலநிலை மாற்றத்திற்கான குழு சொல்லி இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.

வெப்ப அலையை, மாநிலப் பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. வெப்ப அலையை எதிர்கொள்வதற்கான நீர்ச்சத்து மிகுந்த பொருட்களை வழங்க மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம். வெப்ப அலை தாக்கத்தின் போது தண்ணீர் பந்தல்கள் அமைத்து குடிநீர் வழங்குவதற்கும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசு தெரிவித்துள்ளது.

**வெப்ப அலைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை!**

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கடுமையான வெயில் வாட்டியது. வெப்ப அலை மேலாண்மை தொடர்பாக என்னுடைய தலைமையில் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூகநல மையங்கள், மகப்பேறு மருத்துவமனைகள் ஆகியவற்றில் வெப்ப அலையால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்களில், ஐந்தாவது பெருநகரமாக சென்னை இருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் விரைவான நகரமயமாக்கலுக்கு ஏற்ப, இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில், பல்வேறு சவால்களை சமாளிக்கும் வகையிலும், காலநிலைக்கான செயல்திட்டத்தை தயாரிக்கும், C40 நகரங்களுக்கான கூட்டமைப்பில் சென்னை மாநகராட்சி இணைந்துள்ளது. அந்தளவு முன்னெச்சரிக்கையாக அரசு செயல்பட்டு வருகிறது.

**தீவிர சுகாதார சவாலாக காற்று மாசுபாடு இருக்கிறது!**

‘காற்று மாசுபாடு’ சமீபகாலமாக ஒரு தீவிரமான சுகாதார சவாலாக மாறியிருக்கிறது’ என்று ஐ.நா. சொல்லியிருக்கிறது. நம்முடைய இந்தியத் தலைநகர் தில்லியில் அதனுடைய பாதிப்புகளைப் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு திட்டங்களைத் தீட்டவேண்டும்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இங்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசை பொறுத்தவரைக்கும், பொருளாதார மேம்பாட்டையும், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வையும் இரு கண்களாக நினைத்து தொடர்ந்து செயலாற்றி வருகிறோம். அதற்காகதான், நீர்நிலைகள் மறுசீரமைப்பு, Climate Resilient Cities உருவாக்குவது,

Biodiversityயைப் பாதுகாக்குகிறது என்று முன்னெடுப்புகளை எடுக்கிறோம்.

இந்தப் பயணத்தில் சேர்ந்து, தமிழ்நாடு அரசுக்கு அனைத்து ஆலோசனைகளும் வழங்க உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்.

நாம் அனைவரும் இணைந்து, தமிழ்நாட்டை உலக அரங்கில் காலநிலை மீள்திறன் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சியில் மற்ற மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் முன்னோடியாக மாற்றிக் காட்டுவோம் என்பதை இந்தக் கூட்டத்தின் மூலமாக உறுதி எடுத்துக்கொண்டு, செயல்திட்டங்களை முன்னெடுப்போம்.

**இயற்கைக்கு கேடு விளைவிக்காத உலகத்தை வரும் தலைமுறையினருக்கு வழங்குவோம்!**

நம்முடைய வழித்தோன்றல்களாக இந்த பூமியில் வாழப்போகின்ற குழந்தைகள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பசுமையான இயற்கைக்கு கேடுகள் விளைவிக்காத உலகத்தை வழங்க நம்முடைய வாழ்நாளில் திட்டங்களை முன்னெடுத்தோம்; அதில் வெற்றிப் பெற்றோம் என்று வரலாறு சொல்லவேண்டும். அதுதான் காலத்துக்கும் நமக்கான பெருமை என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞர் அணி சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நலஉதவிகள் வழங்குகிறார்!

நாமக்கல், டிச. 6 –

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞர் அணி சார்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாமகிரிப்பேட்டை பேருந்து நிலையம் அருகே நாளை (டிச. 7 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் நடைபெற உள்ளது.

விழாவில் பேரூர் கழகச் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான கே.அன்பழகன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளரும் கவுன்சிலருமான எம்.சுரேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளனர்.

ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி.இராமசுவாமி தலைமை தாங்குகிறார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

கௌரவ விருந்தினராக மாவட்டக் கழக பொருளாளர் ஏ.கே.பாலசந்தர், மாநில அயலக அணி துணை செயலாளர் ஆர்.முத்துவேல் இராமசாமி, மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.ஆனந்தகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

---

# இன்று அண்ணல் அம்பேத்கர் 68வது நினைவு நாள்!



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68வது நினைவு நாள் இன்று (டிச.6).

---

கன மழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் – கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில்

# தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள்!

சென்னை, டிச. 6 –

விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஃபெஞ்சல் புயலால் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசால் போர்க்கால அடிப்படையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வங்கக் கடலில் உருவான “ஃபெஞ்சல் புயல்” காரணமாக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததைத் தொடர்ந்து, உடனடியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, கனமழை எச்சரிக்கை காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மழைநீரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு, பாதுகாப்பான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2.12.2024 அன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

மேலும், கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற மாவட்டங்களில் துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகியோர் ஒருங்கிணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**விழுப்புரம் மாவட்டத்தில் நிவாரணப் பணிகள்**

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தாழ்வான பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு 105 நிவாரண முகாம்களில் 20,625 நபர்கள் (ஆண்கள் 8.885, பெண்கள் 8,919, குழந்தைகள் 2.821) பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், நிவாரண முகாம்களில் தங்கியிருந்த பொதுமக்களுக்கு 49,848 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 6 சமுதாய சமையலறைகளிலிருந்து (Community Kitchen) உணவு தயாரிக்கப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு 82,296 உணவு பொட்டலங்களாக தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு தயாரிப்பதற்காக ஊரகப் பகுதிகளில் 105 சமுதாய சமையல் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அவற்றின் மூலம் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்கள் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்காக 2,90,140 உணவு பொட்டலங்களும், 4000 லிட்டர் பால் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிடும் வகையில் வெளி மாவட்டங்களிலிருந்து பல்வேறு தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரால் 8,665 அரிசி பைகள் (49,650 கிலோ), 15,000 மளிகைப் பொருள் பாக்கெட்டுகள். 2,907 ஆடைகள், 1,320 போர்வைகள். 14,517 பிஸ்கட் பாக்கெட்டுகள், 10,000 தண்ணீர் பாட்டில்கள், 200 பழச்சாறு பாட்டில்கள். 100 கொசு வலைகள், தார்ப்பாய்கள், 820 பெட்ஷீட்டுகள், 565 நாப்கின்ஸ்கள், 700 பால்பவுடர் பாக்கெட்டுகள். 1000 பாய்கள், 1000 பேரிச்சம்பழ பாக்கெட்கள், பிரட், தீப்பெட்டிகள், சோப்புகள், பற்பசைகள் போன்றவையும் பெறப்பட்டு, மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மழைகாலங்களில் மக்களுக்கு ஏற்படும் தொற்றுநோய் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதன் அடிப்படையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால் 183 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 11,578 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள மூன்று நகராட்சிகளிலும் மழைநீர் சூழ்ந்த 42 வார்டுகளில் 469 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டும், பேரூராட்சிகளில் மழைநீர் சூழ்ந்த 12 வார்டுகளில், 333 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டும் தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்றுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக அனைத்து ஊராட்சிகளிலும் தூய்மைப் பணிகள் இன்று நடைபெற்றது.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள 2035 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கிலோ அரிசி 3.12.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தன்னார்வலர்கள் மற்றும் சமூக சேவகர்கள் மூலம் பெறப்பட்ட 45,350 தண்ணீர் பாட்டில்கள். 1500 பிரெட் பாக்கெட்டுகள், 35,400 பிஸ்கட் பாக்கெட்டுகள் ஆகியவையும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

கனமழையின் காரணமாக 3.12.2024 வரை 728 வீடுகள் பகுதியாகவும், 132 வீடுகள் முழுமையாகவும், ஆக மொத்தம் 860 வீடுகள் சேதமடைந்துள்ளது.

**கடலூர் மாவட்டத்தில் நிவாரணப் பணிகள்**

கடலூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் தொடர்ச்சியாக, தென்பெண்ணை ஆற்றில் 2.12.2024 அன்று ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக கடலூர் மாவட்டம், கடலூர் மற்றும் பண்ருட்டி வட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் பொதுமக்கள் வசிக்கும் 25க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்கள் கண்டறியப்பட்டு, அக்கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு உடனடியாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, வருவாய்த்துறை, காவல்துறை, ஊரக வளர்சித்துறை, நீர்வளத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை , தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினர் உள்ளிட்ட பல்வேறு குழுவினருடன் இணைந்து பொதுமக்களை முன்கூட்டியே பாதுகாப்பாக வெளியேற்றி பாதுகாப்பு தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

கனமழையால் பாதிக்கப்பட்டு, மாவட்டத்திலுள்ள 35 நிவாரண முகாம்களில் 19,654 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு 68,350 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காக 15 இடங்களில் சமுதாய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு, 20,300 பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 10,871 பால் பாக்கெட்டுகள், 2000 எண்ணிக்கையிலான 500 கிராம் பால் பவுடர்கள், வெளி மாவட்டங்களிலிருந்து வரப்பெற்ற 600 பால் கெட்டுகள், 5,660 பிரட் மற்றும் பிஸ்கட் பாக்கெட்டுகள், 13,964 தண்ணீர் பாட்டில்கள், 1000 போர்வைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட் டுள்ளன.

மழைக்காலங்களில் ஏற்படும் தொற்றுநோய்களிலிருந்து மக்களை பாதுகாத்திடும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் 50 இடங்களில் நடத்தப்பட்டு வரும் மருத்துவ முகாம்களில் 5285 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிவாரணப் பணிகள்**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் கனமழை காரணமாக, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் காரணமாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கன மழை பெய்த பொழுதிலும் எவ்வித உயிரிழப்பும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து தொடர் மீட்பு மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை வீடு பாதிப்பு மற்றும் கால்நடை உயிரிழப்பு ஆகியவற்றிற்காக நிவாரணத்தொகை 37 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பயிர் சேதம் குறித்த கணக்கெடுப்பு பணிகளும் நடைபெற்று வருகிறது.

கனமழை பாதிப்பினைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 16 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட 1980 நபர்கள் (ஆண்கள் - 831, பெண்கள் - 943, குழந்தைகள் 206) தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு 3809 உணவுப் பொட்டலங்கள், குடிநீர் மற்றும் தேவையான அத்தியாவசிய பொருட்கள், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வாயிலாகவும் ஆவின் நிறுவனம் மூலம் பால் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மழைவெள்ளம் பாதித்த பகுதிகளில் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் இருக்க, தூய்மைப் பணி மேற்கொள்ளும் வகையில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட 3 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 31 கிராம ஊராட்சிகள் ஆகியவற்றில் சுமார் 1,630 தூய்மை பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், மழை பாதிப்புக்குள்ளான கிராமங்களில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களில் 1.12.2024 அன்று 1259 நபர்களுக்கும், 2.12.2024 அன்று 3258 நபர்களுக்கும், 3.12.2024 அன்று 2995 நபர்களுக்கும் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு தேவையான மருந்துகள் வழங்கப்பட்டன. அதுமட்டுமின்றி 3.12.2024 அன்று 33 சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம்களும் நடத்தப்பட்டன.

கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி போன்ற மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொண்டு வருகிறது.

---

திருவண்ணாமலையில் புயலின் போது

# உயிரிழந்த மின்வாரிய ஊழியரின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 6 –

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் பாதிப்பு காரணமாக உயிரிழந்த மின்சார வாரிய ஊழியரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு: –

கடந்த 01.12.2024 இரவு ஏற்பட்ட ஃபெஞ்சல் புயலின்போது திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம், துணை மின் நிலையத்திற்கு உட்பட்ட அண்டம் பள்ளம் மின் மாற்றியில் ஏற்பட்ட மின்தடையை சரிசெய்யும் பணிக்காக வெறையூர் பிரிவிலிருந்து சென்ற மின்பாதை ஆய்வாளர் பி.பாலசுந்தர் (வயது 56) மற்றும் கம்மியர் பி.அண்ணாமலை (வயது 56) ஆகிய இருவரில் பி.அண்ணாமலை பவித்திரம் தரைப்பாலத்தைக் கடக்கும்போது எதிர்பாராதவிதமாக வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனதைத் தொடர்ந்து அவரைத் தேடியதில் 3.12.2024 அன்று பிற்பகல் 3 மணி அளவில் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மின்சார வாரிய ஊழியர் பி.அண்ணாமலை அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

பி.அண்ணாமலை அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிடவும், உயிரிழந்த அண்ணா மலை அவர்களின் குடும்பத்தில் தகுதியான நபர் ஒருவருக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.